06.02.2024

அ.வ.எண். 168-2019 மற்றும் 72-2020

வாசா.1  - ரமேஷ்குமார்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

அ.வ.எண்.72/2020 ல் உள்ள 5 ல் இருந்து 50 வரை உள்ள பிரதிவாதிகள் எங்களிடம் மனையிடங்களை கிரயம் வாங்கியவர்கள் என்றால் சரிதான். அந்த மனையிடங்களுக்கு வேலன் விலாஸ் என்ற பெயரில் விற்பனை செய்துள்ளோம் என்றால் ஆமாம். கடந்த 26.04.2018 ல் எங்களது பொது அதிகார முகவர் மூலமாக பஞ்சாயத்து இடத்தை தானப் பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்தோம் என்றால் ஆமாம். அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் தகப்பனார் மற்றும் குப்புசாமி அவர்களின் மனைவி நாச்சியம்மாளுடன் ஏற்படுத்திக்கொண்ட அந்த தடப் பாத்திய ஒப்பந்தத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ.3 ல் 156/1, 159/5பி, 159/7 ஆகிய மூன்று காலைகளையும் சேர்த்து 4.38 ஏக்கர் வீட்டு மனைகளாக பிரித்துள்ளோம் என்று சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். அந்த வீட்டு மனைகளுக்கு பி.வா.சா.ஆ.3 ன் கீழ் தடம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் தென்வடல் தனியார் தார் சாலைக்கு மேற்கு என எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி தனியார் தார் சாலை என குறிப்பிட்டுள்ளது தான் வழக்கு தடம் என்றால் சரிதான். எங்களுடைய வழக்கில் மனைப்பிரிவுகளாக பிரித்து 5 முதல் 50 பிரதிவாதிகள் விற்பனை செய்தது பொறுத்து சொல்லவில்லை. வழக்கிற்கு முன்பே பி.வா.சா.ஆ.3 பத்திரத்தை ஏற்படுத்தியரை பொருத்து வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான், வழக்கிற்கும் பி.வா.சா.ஆ.3 ற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

எங்களுடைய சொத்திற்கான மனைப்பிரிவு வரைபடத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் விற்பனை செய்துள்ள சொத்துக்களை பொருத்து நான் உரிமை கோர முடியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நாச்சியம்மாளுடன் தடம் சம்மந்தமாக ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்றால்

சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆகும். அது 04.04.1986 ஏற்படுத்திக் கொண்டவை என்றால் சரிதான். வேலுச்சாமி, கந்தசாமி, நாச்சியம்மாள், பத்மாவதி ஆகியோர் தரப்பினர்கள். 154 நம்பர் காலைக்கு குறிப்பிட்டுள்ள பகுதி பத்மாவதிக்கு பாத்தியப்பட்டது. அதன் வழியாகத்தான் செல்வதற்கு தான் இந்த தடப் பாத்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 154 நம்பர் காலை வழியாகத்தான் எங்களது பூமிக்கு செல்ல முடியும் என்றால் இருவரது காலைக்கும் அந்த வழியாகத்தான் செல்ல முடியும்.

பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 2, 3, 4 இலக்கமிட்டவர்களுக்கு அவர்களுடைய 155/2, 156 காலைகளுக்கு செல்ல வண்டித்தடம் தேவைப்படுவதால் என எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.4 ல் கடைசியாக 3 வது வரியில் மேற்படி வண்டித் தடம் விவசாய பூமியில் விவசாய காரியங்களுக்கு உபயோகப்படுத்த வண்டி வாகனங்கள், கால்நடைகள் போகவர வசதிக்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம், இத்தடத்தின் வழியாக நாம் அவரவர் பூமிக்கு வண்டிக் கால்நடை வாகனாதிகள் ஓட்டி தடப்பாத்தியம் அனுபவித்துக் கொள்ள வேண்டியது. 1.08.2015 ல் என் தகப்பனார் மற்றும் 6 நபர்கள் சேர்ந்து கண்ணம்பாளையம் பஞ்சாயத்தில் ரோடு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றால் ஆமாம். இந்த ஆவணம் பி.வா.சா.ஆ.5.

அது 155 நம்பர் காலையை பொறுத்துதான் ஏற்படுத்திக்கொடுத்தது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் கண்ணம்பாளயைம் பஞ்சாயத்து ரோட்டிற்கும் வடக்கு, என எழுதப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் உள்ள அனைத்தும் சரியானது. 05.07.1993 ல் எனது பாட்டி நாச்சியம்மாள் பிரதிவாதிக்கு 158, 159 காலையில் பூமியை விற்பனை செய்துள்ளார் என்றால் இதை பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார், பெரியப்பா, பாட்டி நாச்சியம்மாள் எங்களது சொத்தை விவசாய பூமியாகவே விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு என் தகப்பனார் கடந்த 04.08.1993 ல் கண்ணம்பாளையம் கிராமப் புல எண். 156/2 ல் 2.57 ஏக்கர் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். 05.08.1993 ல் என் தகப்பனார் 159/9 நம்பர் காலையில் 1.59 ஏக்கர் விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள்

மனைப்பிரிவு செய்த இடத்திற்கு தென்புறம் இந்த பூமி அமைந்துள்ளது.

எனது பெரியப்பா வேலுச்சாமி. தாவா தடம் அந்த ஆவணத்தில் உள்ள 4 நபர்களுக்கு விவசாய காரியங்களுக்கு மட்டும் ஏற்படுத்தப்பட்ட தடம் என்றும், அதை 3ம் நபர்கள் அனுபவம் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதி அமைத்துள்ள கேட்டை எடுக்கக் கேட்டு பரிகாரம் கோரவில்லை என்றால் அது எங்களது அனுமதியின் பெயரில் தான் வைக்கப்பட்டுள்ளது. அந்த கேட் தாவா தடம் என சொல்லப்படும் பகுதியில் தான் உள்ளது. மேற்படி தாவா தடத்தை விவசாய காரியத்தை தவிர வேறு காரியத்திற்கு நாங்கள் பயன்படுத்தியது இல்லை என்பதால் தான் பிரதிவாதி அதில் கேட் அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. 155/1பி காலையில் உள்ள இடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது, அந்த இடத்தின் வழியாக எங்களது இடத்திற்கு நாங்கள் சென்று வருகிறோம். தாவா தடத்தில் உள்ள கேட்டை அகற்றிவிட்டால் 155 காலை வழியாக செல்ல மாட்டோம்.

155 காலைக்கும், இந்த வழக்கிற்கும் பரிகாரம் கேட்க அவசியம் இல்லை என்று, வழக்கில் சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. அ.வ.எண்.72/2020 2வது பரிகாரமாக தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக நாங்கள் யாதொறு தடப்பாத்திய உரிமையும் கோரியதே இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா தடத்தின் வழியாக எங்களிடம் கிரயம் வாங்கியவர்களுக்கு சென்றுவர எவ்வித உரிமையும் எங்களைத் தவிர இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் கிரயம் வாங்கியவர்களுக்கு தாவா தடத்தை கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எங்களுக்கு கண்ணம்பாளையம் பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றும், தாவா தடத்தை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த 72/2020 வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ரமேஷ்குமார்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2024.02.07 09:45:50 +0530

District Munsif
Sulur